**கவனிக்க.-** *2006.03.31 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1440 - 2006 අප්‍රේල් 07 වැනි සිකුරාදා - 2006.04.07

*1440 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | – |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 198 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | – |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 198 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | – |
| அரசாங்க அறிவித்தல்கள் | 199 |
| விலைக்கட்டளைகள் | – |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | – |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | – |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 200 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | – |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | – |


**கவனிக்க.-** (i) வங்கித் தொழிற் (திருத்தம்) சட்டமூலம் 2006, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் 2006, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) இறப்பர் மீளநடுகை மானி (திருத்தம்) சட்டமூலம் 2006, மாச்சு 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, ஏப்பிறல் 12 ஆந் தேதி புதன்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, மாச்சு 31 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2006 இன் இல.78

ச. அ. இல. : ஏடிஎவ்/ஏ7/2005 (22)

அதிமேதகு சனாதிபதி அவர்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடு களைப் பின்பற்றி, இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திரு. டபிள்யூ. ஜே. ஆனந்த அவர்களை, 2006.03.16 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, சனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்களுள் ஒருவராக நியமிப்பதில் களிகூர்ந்துள்ளார்கள் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2006, மாச்சு மாதம் 20 ஆந் திகதி.

4-126

2006 இன் இல. 79

ச. அ. இல. : ஏடிஎவ்/ஏ7/2005 (22)

அதிமேதகு சனாதிபதி அவர்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடு களைப் பின்பற்றி, இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II/II ஐச் சேர்ந்த செல்வி சந்திமா விக்கிரமசிங்க அவர்களை, 2006.03.17 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, சனாதிபதியின் உதவிச் செயலாளரொருவராக நியமிப்பதில் களிகூர்ந்துள்ளார்கள் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2006, மாச்சு மாதம் 20 ஆந் திகதி.

4-125

# மற்றைய நியமனங்களும் பிறவும்

2006 இன் இல. 80

### இலங்கை நிர்வாக சேவையின் நியமனம்

இலங்கை நிர்வாக சேவையின் தரம் II/II ஐச் சேர்ந்த திருமதி எச். ஆர். எஸ். எஸ். யாபா அவர்கள் 2005.10.18 ஆந் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் பிறப்பிக்கும் வரை அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சில் உதவி தாபனப் பணிப்பாளராக.

இலங்கை நிர்வாக சேவையின் தரம் II/II ஐச் சேர்ந்த திருமதி சித்திரா ரணசிங்க அவர்கள் 2005.10.18 ஆந் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் பிறப்பிக்கும் வரை காணி ஆணையார் நாயகத் திணைக்கத்தில் உதவி காணி ஆணையாளராக.

இலங்கை நிர்வாக சேவையின் தரம் II/II ஐச் சேர்ந்த திருமதி எஸ். ஜயவர்ண அவர்கள் 2005.10.18 ஆந் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் பிறப்பிக்கும் வரை இலங்கை புகையிரத திணைக்களத்தின் பிரதான நிர்வாக உத்தியோகத்தராக.

இலங்கை நிர்வாக சேவையின் தரம் II/II ஐச் சேர்ந்த திரு. ரி. குணசேன அவர்கள் 2005.10.20 ஆந் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் பிறப்பிக்கும் வரை உதவி தொழில் ஆணையாளராக.

இலங்கை நிர்வாக சேவையின் தரம் II/II ஐச் சேர்ந்த திரு. டபிள்யூ. எஸ். ஜ. விஜேசேகர அவர்கள் 2005.10.19 ஆந் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் பிறப்பிக்கும் வரை உதவித் தொழில் ஆணையாளராக.

இலங்கை நிர்வாக சேவையின் தரம் II/II ஐச் சேர்ந்த திரு. எச் பி. சுமனசேகர அவர்கள் 2005.04.04. ஆந் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் பிறப்பிக்கும் வரை தபால், தொலைத்தொடர்பு மற்றும் மலையக அபிவிருத்தி அமைச்சில் உதவிச் செயலாளராக.

இலங்கை நிர்வாக சேவையின் தரம் II ஐச் சேர்ந்த திரு. ஏ. எச். எல். த சொய்சா அவர்கள் 2005.11.28 ஆந் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் பிறப்பிக்கும் வரை அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சில் இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளராக.

இலங்கை நிர்வாக சேவையின் தரம் II ஐச் சேர்ந்த திருமதி கே. டி. சி. பெர்ணான்டோ அவர்கள் 2005.10.18 ஆந் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் பிறப்பிக்கும் வரை விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சில் உதவிச் செயலாளராக.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திருமதி டப். எம். எம். ஆர். அதிகாரி அவர்கள் 2006.01.19 ஆந் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் பிறப்பிக்கும் வரை சமுர்த்தி வறுமை ஒழிப்பு பற்றிய அமைச்சுக்கு இணைப்புச் செய்தல்.

இலங்கை நிர்வாக சேவையின் தரம் II/II ஐச் சேர்ந்த திரு. பி. எச். என். ஜயவிக்கிரம அவர்கள் 2006.01.05 ஆந் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் பிறப்பிக்கும் வரை பிரதம அமைச்சரின் அலுவலகத்தில் உதவிச் செயலாளராக.

இலங்கை நிர்வாக சேவையின் தரம் II/II ஐச் சேர்ந்த திரு. ஆர். எம். ரஞ்சித் குமாரதாஸ அவர்கள் 2005.10.18 ஆந் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் பிறப்பிக்கும் வரை அரசாங்க நிர்வாக, உள் நாட்டலுவல்கள் அமைச்சில் உதவிச் செயலாளராக.

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2006, மாச்சு.

4-129

# அரசாங்க அறிவித்தல்கள்

## 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, கடன் இணக்கக் கட்டளைச் சட்டம்

25 ஆம், 26 ஆம் பிரிவுகளின் கீழ் அறிவித்தல்

1941 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினாலும் 1959 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1973 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ், அதற்கான அட்டவணையில் உள்ள விண்ணப்பத்திற்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள கடன் கொடுத்தவருக்கும் கடனாளிக்கும் இடையில் இணக்கமொன்றினை ஏற்படுத்தும் முயற்சியை மேற்கொள்ள கடன் இணக்க சபை உத்தேசித்துள்ளது.

2. ஆதலின், சம்பந்தப்பட்ட கடன் கொடுத்தவர்கள், சபையின் முன் தோற்றுமாறு அவர்கள் தேவைப்படுத்தப்பட்ட தேதிக்கு முன்னர் கீழ்க் கண்ட கடனாளிகளிடமிருந்து தங்களுக்கு வருமதியாகவுள்ள கடன்களின் விவரங்களைச் சபைக்குக் கொடுத்துதவுமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 25 (1), 26 (1) ஆகிய பிரிவுகளினது நியதிகளின்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

என். டபிள்யூ. குணதாச,
செயலாளர்,
கடன் இணக்க சபைத் திணைக்களம்.

கடன் இணக்க சபைத் திணைக்களம்,
இல. 90, இரண்டாம் மாடி,
அரசாங்க எழுதுநர் சேவைகள் சங்கக் கட்டிடம்,
சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்தை,
கொழும்பு 2,
2006.03.19.

### அட்டவணை

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| (1) 40171 | திரு. வாசல முதியன்சேலாகே அசோக குலரத்ன பண்டார, மாலிகாதென்ன, தலகஸ்வத்த, நில்தண்டாஹின்ன. | திருமதி யாபா முதியன்சேலாகே ஐராங்கனீ யாபா, உடவெல, நில்தண்டாஹின்ன, மெதபலாத்த, வலபனே. |
| (2) 40177 | திரு. பெல்பொலகே தொன் சமரபால சேமசிறி குணதிலக, இல. 119 டீ, பொல்ஹேன, களனி. | திரு. கனிப்புலி அச்சிகே மறுபெயர் கனிப்புலி ஆரச்சிகே நிமல் ஜயசிங்க, பன்சலை வீதி, ஜம்புரலிய, மடபாத. |
| (3) 40193 | திருமதி கல்கெட்டி தேவகே சாந்தனீ அமரசிங்க, 42/ஏ, வெல்ஹேன, மினுவான்கொட. | திரு. வலிமுனி தேவகே சோமபால, இல. 2/41, வெல்ஹேன, மினுவான்கொட. |
| (4) 40205 | திருமதி முதுகுட ஆரச்சிகே கருணாவதீ, மூகலங்யாய, குலி/கிரிந்தவ. | திரு. கருணாநாயக்க முதியன்சேலாகே நிலந்த குமார, மூகலங்யாய, குலி/கிரிந்தவ. |

| *விண்ணப்ப இல.* | *கடனாளியின் பெயரும் முகவரியும்* | *கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும்* |
|---|---|---|
| (5) 40212 | திரு. சேனாநாயக்க புல்லிகுட்டி முதியன்சேலாகே எறிக் பெரேரா, பனாவத்த வீதி, கராகொட, எட்டியாந்தோட்டை. | திரு. தியோகு ஹென்னெதிகே சோமசிறி, பனாவத்த வீதி, கராகொட, எட்டியாந்தோட்டை. |
| (6) 40226 | திருமதி ரஞ்சாகொட ஆரச்சிகே பிரியாஷா சரோஜினீ கருணாரத்ன, இல. 491, ஆசுப்பத்திரி வீதி, வலகெதர, பலபிட்டிய. | திரு. குணவர்தன ஆனந்த சொய்ஸா, இல. 9/2/2, நீர்ப்பாசன மாடி வீடுகள், கந்தவல வீதி, இரத்மலானை. |

4-77

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## பேன் ஏசியா வங்கிக் கோப்பரேஷன் லிமிட்டெட்

(முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி)

(மெட்ரோ கிளை) - வயம்ப டிரேடர்ஸ் - கூட்டு வியாபாரம்

*1990 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2006.01.10 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் பின்வருமாறு விசேடமாகவும், ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது:-*

*"சேகு அப்துல் காதர் வகிதா ரகுமான் உடன் சாகுல் ஹமீட் சதிக்கீன் இணைந்து 'வயம்ப டிரேடர்ஸ்' எனும் வியாபாரத்தை உதவுநராகவும், சாகுல் ஹமீட் சதிக்கீன் கடனெடுத்தவராகவும், வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கோப்பரேஷன் முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எம். புவாட் என்பவரால் 1996.12.17 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2483 ஆம் இலக்க முறியின் மீதும், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டீ. வீ. எகொடகே என்பவரால் 1999.04.16 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 24 ஆம் இலக்க முறியின் மீதும், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். ஐ. சமரசிங்க என்பவரால் 2003.10.23 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1386 ஆம் இலக்க முறியின் மீதும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ. பீ. பி. பள்ளியகுருகே என்பவரால் 2005.06.29 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 129 ஆம் இலக்க முறியின் மீதும் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்போது 2005.11.14 ஆந் திகதி சொல்லப்பட்ட முறிகளின் மீது மூன்று கோடியே ஐந்து இலட்சத்து ஐம்பத்திரெண்டாயிரத்து முந்நூற்று அறுபத்தி ஒன்பது ரூபா ஐம்பத்தியேழு சதம் (ரூ. 3,05,52,369.57) செலுத்த வேண்டியுள்ளதால், 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் பணிப்பாளர் சபை 1 ஆம் அட்டவணையின்படி 2483, 24 முறிகளின் மீதும் 2 ஆம் அட்டவணையின்படி 1386,129 முறிகளின் மீதும் மூன்று கோடியே ஐந்து இலட்சத்து ஐம்பத்திரெண்டாயிரத்து முந்நூற்று அறுபத்தி ஒன்பது ரூபா ஐம்பத்தியேழு சதம் (ரூ. 3,05,52,369.57) அத்துடன் மூன்று கோடியே ஐந்து இலட்சத்து ஐம்பத்திரெண்டாயிரத்து தொழாயிரத்து தொண்ணூற்று ஏழு ரூபா நாற்பத்தியேழு சதம் (ரூ. 53,53,997.47) ஆண்டொன்றிற்கு முப்பத்தியொரு வீத (31%) வட்டியும், இரண்டு கோடியே முப்பது இலட்சம் ரூபா (ரூ. 2,30,00,000) ஆண்டொன்றுக்கு இருபத்திரெண்டு வீத (22%) வட்டியும், 2005, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை, விளம்பரச் செலவுகளையும் கூறப்பட்ட வேறு அற வீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக சொல்லப்பட்ட 2483, 24, 1386, 129 முறிகளினால் பேன் ஏசியா வங்கிக் கோப்பரேஷனுக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் சொக்மன் சமரவிக்ரம என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென தீர்மானித்துள்ளது."*

### முதலாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்ட பள்ளேபத்து சல்பிட்டி கோறளை, கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அளுத்கடை மேற்கில் 17 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள இல. 86, பியர் சாய்பு வீதி என்ற முகவரியைக் கொண்ட 1996, நவெம்பர் 21 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஆர். கனகரட்னத்தினால் இல. 6685 என்ற வரைபடத்தின்படி காணித்துண்டு A - வடக்கில் : மதிப்பீட்டு இலக்கம், கணிப்பீட்டு இலக்கம் 90, 90/1 முதல் 90/7 பியர் சாய்பு வீதியும் 202, 204, 206 , பழைய சோனகத் தெரு, 62, ஹல்ஸ்ரொப் வீதியும் ; கிழக்கில் : கணிப்பீட்டு இலக்கங்கள் 62, 64 ; தெற்கில் : கணிப்பீட்டு இலக்கம் 84, பியர் சாய்பு வீதியும் , கணிப்பீட்டு இலக்கம் 64 ஹல்ஸ்ரொப் வீதியும் ; மேற்கில் : காணித்துண்டு 7A யும், 1993, யூலை 21 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் A. றெக்ஸ் பொன்சேகாவினால் வரைபட இலக்கம் 2100 காணித்துண்டு 1 உம் உள்ளடக்கிய 15.07 பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15.07பே.) அத்துடன் வரைபடம் 6685 இன்படி சகல கட்டிடங்களும், காணித்துண்டு 7A அடையாளமிடப்பட்ட பாதையும்.

### இரண்டாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்ட மாநகர சபை எல்லைக்குள் குப்பியாவத்தை கிழக்கு வட்டாரத்தில் முன்னைய மாளிகாகந்த

வட்டாரத்தில் கணிப்பீட்டு இலக்கம் 1 (பகுதி) வைற்பாக்கில் உள்ள சகல மரங்கள், தோட்டங்கள் மற்றும் சகலதும். நிலஅளவையாளரினால் மாச்சு மாதம் 8 ஆந் திகதி 1947 வரைபட இலக்கம் 4 அரச காணியில் (வரைபட இலக்கம் 3 காணித்துண்டு 1 இன் பகுதி) காணித்துண்டு 2 - வடக்கில் : காணித்துண்டு 3 ; கிழக்கில் : கணிப்பீட்டு இலக்கம் 1 வைற்பாக் ; தெற்கில் : காணித்துண்டு 1 ; மேற்கில் : காணித்துண்டு 13 ஆக எட்டு தசம் பூஜ்யம் இரண்டு பேர்ச்சஸ் 0ஏ. 0றூ. 8.02பே.) 1988 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 3 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் சீ. எல். சீ. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இலக்கம் 96 கடைசியாக அளவிடப்பட்ட வரைபடம் 96 இல் காணத்துண்டு 2 பின்வருமாறு அமைகிறது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மாநகர சபை எல்லைக்குள் குப்பியாவத்தை கிழக்கு வட்டாரத்தில் முன்னைய மாளிகாகந்த வட்டாரம், 1994, ஓகத்து 24 இல் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எம். சீ. எல். சீ. பெரேராவினால் தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 61/94 இன்படி காணித்துண்டு 2, ஹைற்பாக், மாளிகாந்த வீதியில் மதிப்பீட்டு 181/25 வைற்பாக்- வடக்கில் : 1988, ஓகத்து 3, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எம். சீ. எல். சீ. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இலக்கம் 96 இன்படி ; கிழக்கில் : கணிப்பீட்டு இலக்கம் 1 வைற்பாக் ; தெற்கில் : காணித்துண்டு 1 ; மேற்கில் : காணித்துண்டு 13 ஆக எட்டு தசம் பூஜ்யம் இரண்டு பேர்ச்சஸ் வரைபடம் இலக்கம் 61/94 இன்படி அத்துடன் பாதை இடமும் காணித்துண்டு 13.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

வருணி எகொடகே,
முகாமையாளர் - சட்டம்.

4-87

---

### தேசிய சேமிப்பு வங்கி

கடன் இலக்கம் 17919/15/3

1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் 2005.10.13 திகதியன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"ஜயதிலக்கவத்த, முனகம, ஹொரண ஐச் சேர்ந்த திரு. ஜானக ருவன் குமார நாவின்ன என்பவரை ஈடுவைத்துள்ளவராகக் கொண்டு, தேசிய சேமிப்பு வங்கியின் சார்பில் கிருஷாந்தி பலிஹகார என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998.05.06 ஆந் திகதிய 2806 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது 2005.10.10 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒரு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து முந்நூற்று எண்பத்தேழு ரூபா ஐம்பத்தொரு சதம் (ரூ. 1,68,387.51) கொண்ட தொகை இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கிக்கு வருமதியாகவும் சேருமதியாகவும் இருக்கின்றதாதலால், சொல்லப்பட்ட 2806 ஆம் இலக்க ஈட்டு முறி மூலம் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட, இதற்கான அட்டவணையில் மிகவும் முழுமையாக விபரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும், சொல்லப்பட்ட 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் அண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் படி அறவிடற்பாலனவான விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், ஏனைய இறுப்பனவுகள் மற்றும் பணங்கள் என்பவற்றுடன் சேர்த்து, சொல்லப்பட்ட 1,68,387.51 ரூபா கொண்ட தொகையை 2005.10.10 தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டுக்கு 15% வட்டியுடன் அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கிறது."

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை உடகஹபற்று இன் ஹோமாகம பிரதேச சபை வட்டார உப அலுவலக எல்லைகட்குட்பட்ட கஹதுடுவயில் அமைந்துள்ள ஹீட்டவலதெனிய என்றும் ஒபடாதெனிய என்றும் அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். எல். பி. சத்திரசிங்கவினால் ஆக்கப்பட்ட 1997.03.26 திகதியிட்ட 1163 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 34 என அடையாளமிடப்பட்டதும்- வடக்கில் : துண்டு ஆர்5 (20 அடி அகல பாதை ஒதுக்கு) ஐயும் ; கிழக்கில் : துண்டு 33 ஐயும் ; தெற்கில் : துண்டு 32 உம் துண்டு ஆர் 10 (வடிகால்) ஐயும் ; மேற்கில்: துண்டு 35 ஐயும் எல்லைளாகக் கொண்டதும் சொல்லப்பட்ட 1163 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய விஸ்தீரணத்தில் பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10பே.) கொண்டதும் கட்டிடங்கள், மரங்கள் பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாகவும், கொழும்பு (தற்போது ஹோமாகம காணிப்பதிவகம்) காணிப்பதிவகத்தில் கோவை இல. 253/276 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான துண்டு 34 என பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும்.

1163 ஆம் இலக்க வரைபடத்தில் சொல்லப்பட்ட துண்டுகள் ஆர் 3 மற்றும் ஆர் 5 இல் குறிப்பிடும் பாதை ஒதுக்கின் மேலாகவும், ஊடாகவும் செல்வதற்கான பாதையுரித்தும் உள்ளடங்களாக.

முகாமையாளர் - கடன்.

தேசிய சேமிப்பு வங்கி,
இல. 255, காலி வீதி,
கொழும்பு 3,

4-95

---

### தேசிய சேமிப்பு வங்கி

கடன் இலக்கம் : 16259/18, 16768/17

1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் அண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் 2005.09.05 திகதியன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை

விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"இல. 587/1, காலி வீதி, வலகெதர பலபிட்டிய (முன்னர் இல. 57/4, எல்பிட்டிய வீதி, அம்பலங்கொடையைச் சேர்ந்த திரு. கிரிபுர செனரத் பலிகவர்த்தன சந்திரகுப்த அபேசேகர என்பவரை ஈடுவைத்துள்ளவராகக் கொண்டு, தேசிய சேமிப்பு வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு கிரிசாந்தி பலிஹகார என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1996.11.22, 1997.05.19 ஆந் திகதிய 2280, 2240 ஆந் இலக்க ஈட்டு முறிகளின் மீது 2005.09.10 ஆந் திகதியன்றுள்ளவாறாக எட்டு இலட்சத்து முப்பதாயிரத்து தொளாயிரத்துமுப்பது ரூபா அறுபத்திரெண்டு சதம் (ரூ. 8,30,930.62) ஐக் கொண்ட தொகை இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கிக்கு வருமதியாகவும் சேருமதியாகவும் இருக்கின்றதாதலால், சொல்லப்பட்ட 766 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும், சொல்லப்பட்ட 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் அண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் படி அறவிடற்பாலனவான விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், ஏனைய இறுப்பனவுகள் மற்றும் பணங்கள் என்பவற்றுடன் சேர்த்து, சொல்லப்பட்ட ரூபா 8,30,930.62 சதம் கொண்ட தொகையை 2005.09.10 தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டுக்கு 18% வட்டியுடன் அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கிறது."

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், வெல்லபொடபத்து, பலபிட்டிய பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வலகெதர பலப்பிட்டியவில் அமைந்துள்ள எகொடவத்த என அழைக்கப்படும் காணியும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஜி. மென்டிஸ் அவர்ளால் ஆக்கப்பட்ட 1981.08.04, 1981.09.26 மற்றும் 1981.10.05 திகதியிட்ட 1053 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 1 என அடையாளமிடப் பட்டதும் - வடக்கில் : ரெணராலவின் காணிகளையும் ; கிழக்கில் : துண்டு 2 ஐயும் ; தெற்கில் : துண்டு 26 ஐயும் (பாதை ஒதுக்கு) ; மேற்கில் : டினலாகேவத்தவையும் எல்லைகளாகக் கொண்டதும் பலப்பிட்டிய காணிப்பதிவகத்தில் கோவை ஏ 126/241 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட 1053 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய விஸ்தீரணத்தில் பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10பே.) கொண்டதுமான பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும்.

முகாமையாளர் - கடன்.

தேசிய சேமிப்பு வங்கி,
இல. 255, காலி வீதி,
கொழும்பு 3,

4-96

### தேசிய சேமிப்பு வங்கி

கடன் இலக்கம் 22404/13.5%

1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான 1990 ஆம் அண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் 2005.11.03 ஆந் திகதியன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை விசேட மாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"இல. 118, சீக்கோ தோட்டம், கடபுவன, பிலியந்தலையைச் சேர்ந்த திரு. மொகமட் ரியாஸ் காமில் என்பவரை ஈடுவைத்துள்ளவராகக் கொண்டு, எஸ். ஏ. எம். ஏ. சி. ஜே. எஸ். கே. சேனாரட்ண என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000.06.26 ஆந் திகதிய634 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது 2005.11.25 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒரு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து முன்னூற்றி அறுபத்திரெண்டு ரூபா எழுபத்திநாலு சதம் (ரூ. 1,29,362.74) ஐக் கொண்ட தொகை இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கிக்கு வருமதியாகவும் சேருமதியாகவும் இருக்கின்றதாதலால், சொல்லப்பட்ட 634ஆம் இலக்க ஈட்டு முறி மூலம் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட, இதற்கான அட்டவணையில் மிகவும் முழுமையாக விபரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும், சொல்லப்பட்ட 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் அண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் படி அறவிடற்பாலனவான விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், ஏனைய இறுப்பனவுகள் மற்றும் பணங்கள் என்பவற்றுடன் சேர்த்து, சொல்லப்பட்ட ரூபா 1,29,362.74 சதம் கொண்ட தொகையை 2005.11.25 தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டுக்கு 13.5% வட்டியுடன் அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கிறது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை மெதபற்றுவின் ஹோமாகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மடுலு வாவவில் அமைந்துள்ள நில்வங்கல எஸ்டேட்டும் அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஏ. ஜயரத்னவினால் ஆக்கப்பட்ட 1998.10.14 திகதியிட்ட 2169 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 9 என அடையாளமிடப்பட்டதும் - வடக்கில் : துண்டு 10 ஐயும் ; கிழக்கில் : துண்டு 17 ஐயும் ; தெற்கில் : துண்டு 8 ஐயும் ; மேற்கில் : டி. யூ. ஜயசூரியவின் ஆதனத்தை யும் எல்லைளாகக் கொண்டதும் 2169 ஆம் இலக்க சொல்லப் பட்ட வரைபடத்திற்கமைய விஸ்தீரணத்தில் பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10பே.) கொண்டதும் அவிசாவளை காணிப்பதிவகத்தில் என் 215/190 கோவையின் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான துண்டு 9 என பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும்.

பாதை உரித்தும் மேலே சொல்லப்பட்ட 2169 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 17 (20 அடி அகலப் பாதை ஒதுக்கு, 2169 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட ஏனைய அனைத்து பாதை ஒதுக்குகள் மற்றும் துண்டு 60 என அடையாளமிடப்பட்ட காணியின் (சமூகநல தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டது) மேலாகவும் ஊடாகவும் செல்வதற்கான ஏனைய உரித்துகளும் உள்ளடங்கலாகவும்.

முகாமையாளர் - கடன்.

தேசிய சேமிப்பு வங்கி,
இல. 255, காலி வீதி,
கொழும்பு 3,

4-97

---

## வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபையினால் இணைத்துக்கொள்ளப்பட்ட தீர்மானம்

க/கு இல. 0014 5001 0150-எல். கே. ஜீ. கருணாவதி மற்றும் எம். எல். பியதிலக்க

2004.04.29 ஆந் திகதியன்று வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபையினால் நடாத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாவது-

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் தெனியாய, கொலவெனிகம, பெலியத்தகும்புர "நிசல" லியன கங்கானம் கமகே கருணாவதி பிணைப்படுத்தப்பட்டவராக வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பாக மாத்தறை பிரசித்த நொத்தாரிசு எஸ். டீ. ஹேவாவித்தாரனவினால் 2002, மே 3 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஈட்டுப்பிணை 323 மீது கட்டணங்களை செலுத்தத் தவறியுள்ளார். ஆகவே தற்பொழுது வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி லிமிட்டெட்டிற்கு 2004, சனவரி 22 ஆந் திகதியன்று உள்ளவாறு ஐந்து இலட்சத்து எண்பத்தையாயிரத்து தொளாயிரத்து மூன்று ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 5,85,903.57) நிலுவையாக செலுத்தவேண்டியுள்ளது. எனவே வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் மீட்புச்சட்டத்தினால் (விசேட ஏற்பாடுகள்) வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் இங்கே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள மேற்படி பிணை இல. 323 இனால் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைத்துள்ள சொத்துக்கள் மற்றும் வளவுகளை மேற்கூறப்பட்ட ஐந்து இலட்சத்து எண்பத்தையாயிரத்து தொளாயிரத்துமூன்று ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 5,85,903.57) தொகையினை நான்கு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூ. 4,47,500) தொகைக்கு 2004, சனவரி 23 ஆந் திகதிவரை வருடாந்தம் இருபத்திமூன்று வீத (23%) மேலதிக வட்டியுடனும் விளம்பரச் செலவு மற்றும் ஏனைய நிகழ்ந்த செலவுகளுடனும் கிடைக்கப்பெற்றவைகளைக் கழித்து (ஏது மிருப்பின்) மீட்டுக்கொள்வதற்காக கண்டி அனுமதிபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படும்.

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் மொறவக்க கோரளையில் கொட்டபொலவின் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை எல்லைக்குள் கொட்டபொல என்னுமிடத்தில் அமைந்துள்ள மலதிகேதெனியகாவஹேன என்றழைக்கப்படுகின்ற காணியின் அனுமதிபெற்ற நில அளவையாளர் ஐ. கொட்டாம்பகேயினால் 1997, மே 16 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1806 இல் லொட் 01 என குறிப்பிடப்பட்ட காணியின் (அனுமதிபெற்ற நில அளவையாளர் எம். பி. குடாஹெட்டியினால் 1958, ஒகத்து 12 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட (மா. நீ. மாத்தறை 1269/ P) வரைபட இல. 1010 எனக் குறிப்பிடப்பட்டுள்ள லொட் சி இன் ஒரு மீள் அளவை) எல்லாம் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு மற்றும் அங்குள்ள கட்டிடங்கள், மரங்கள், பெருந்தோட்டங்கள் மற்றும் சகலவற்றுடன். மேற்கூறப்பட்ட லொட் 01- வடக்கில் : மேற்படி வரைபட இல. 1010 இல் லொட் பி ; கிழக்கில் : பெலவத்ததெனிய ; தெற்கில் : மேற்படி வரைபட இல. 1010 இல் லொட் டி ; மற்றும் மேற்கில் : தெனியாயவிலிருந்து அக்கரஸ்ஸவுக்கான பிரதான பாதை ஆகிய அமைவிடங்களைக் கொண்டு மேற்படி வரைபட இல. 1806 இன் பிரகாரம் முப்பத்திமூன்று தசம் ஆறு நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 33.64பே.) 0.085 ஹெக்டெயர் விஸ்தீரணத்துடன் அமைந்திருப்பதோடு கொட்டபொல காணிப்பதிவகத்தில் ஏடு/பக்கம் G 2/309 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளையின்படி,

கம்பெனிச் செயலாளர்.

4-105/1

---

## வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0046 1000 0032-கூல்வேவ் றெப்ரிஜரேட்டர் எஞ்ஜினியரிங் வர்க்ஸ்

2005, யூன் 29 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதாவது :

"இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு, பண்டாரவளை, பதுளை வீதி, தந்திரிய எனுமிடத்தில் இல. 343 தற்போது 611, இல், 'கூல்வேவ் றெப்றெஜரேட்டர் எஞ்ஜினியரிங் வர்க்ஸ்' என்னும் பெயரின் மற்றும் மகுடத்தின் கீழ் ஏக உரிமையாளராக தொழில் நடத்தும் மேல் கூறப்பட்ட குடியரசில் பண்டாரவளை, விஸாகா மாவத்தையில் இல. 77/4 இல் வசிக்கும் அப்துல் கபூர் பைரூஸ் கடப்பாடுடையவராக, வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பாக பண்டாரவளையைச் சேர்ந்த பிரசித்திபெற்ற நொத்தாரிசு எம். சீ. ஜே. பீரிஸ் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 2003, மே 12 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 11375 மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும்,

2005, ஏப்பிறல் 26 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு இரண்டு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து எழுநூற்று நாற்பத்து நான்கு ரூபா நாற்பத்திநான்கு சதம் (ரூ. 2,19,744.44) கொண்ட தொகை தற்போது வரவேண்டியதும் உரியதாகவுள்ளதாதலாலும், 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையானது சொல்லப்பட்ட இலங்கையில் பாவனையிலுள்ள நாணயத்திலான முழுத் தொகை இரண்டு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து எழுநூற்று நாற்பத்து நான்கு ரூபா நாற்பத்திநான்கு சதம் (ரூ. 2,19,744.44) ஐ 2005, ஏப்பிறல் 27 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரை ஒரு இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து அறுநூறு ரூபா (ரூ. 1,99,600) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பத்தொன்பது (19%) சதவீத வட்டியுடனும் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இலக்கம் 11375 ஐக் கொண்ட சொல்லப்பட்ட முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கண்டியைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது."

### அட்டவணை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம். மெதிகிந்த, மஹபளாத்த, பண்டாரவளை நகர சபை எல்லையினுள் அஸ்வெத்துமபடன என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். சுமதிரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2000, ஏப்பிறல் 29 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 948 இல் குறிப்பிடப்பட்டு துண்டு பி3 என ஆயினும் மிகச் சரியாக துண்டு 3 எனும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட முழுக் காணித்துண்டு அதன்கண் அமைந்த வரி மதிப்பிட்டு இல. 611 ஐக் கொண்ட கட்டிடம் மற்றும் சகலதுடன் சொல்லப்பட்ட காணியின் எல்லைகளாவன– வடக்கில் : மேல் கூறப்பட்ட நிலஅளவை வரைபட இல. 948 இல் துண்டு 2 ; கிழக்கில் : வழி (H) ; தெற்கில் : கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 948 இல் துண்டு 4 மற்றும் ; மேற்கில் : கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 948 இல் துண்டு 1 என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 948 இற்கமைய இந்தக் காணி மூன்று தசம் ஒன்று மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 3.13பே.) அல்லது (0.0079ஹெக்.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி பதுளை காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஜே 113/252 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் விஜித செல்லஹேவா அவர்களால் தயாரிக்கப்பட்ட 2003, மே 02 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபட இல. 671 கொண்ட அண்மைய நிலஅளவையின்படி கீழ் காணும் முறையில் விவரிக்கப்படுகிறது :

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம். பண்டாரவளை தொகுதியில் மஹபளாத்த கோரளை, பண்டாரவளை நகர சபை எல்லையினுள் வரி மதிப்பீடு இல. 611 ஐக் கொண்ட அஸ்வெத்துமபடன என அழைக்கப்படும் காணியின் மேல் கூறப்பட்ட நிலஅளவை வரைபட இல. 671 இல் துண்டு 1 என விவரிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். மேல் கூறப்பட் நிலஅளவை வரைபடத்தின்படி இந்தக் காணியின் எல்லைகளாவன – வடக்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எம். சுமதிரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்ட நிலஅளவை வரைபட இல. 948 இல் துண்டு 1 மற்றும் 2 மற்றும் வழி ; கிழக்கில் : வழி மற்றும் வழி (H) ; தெற்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எம். சுமதிரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 948 இல் துண்டு 4 மற்றும் ; மேற்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். சுமதிரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 948 இல் துண்டு 1 என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 948 இற்கமைய இந்தக் காணி மூன்று தசம் ஒன்று மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 3.13பே.) அல்லது பூஜ்யம் தசம் பூஜ்யம் பூஜ்யம் ஏழு ஒன்பது ஹெக்டேயர் (0.0079ஹெக்.) விஸ்தீரணமுடையது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

4-105/2

---

### வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபையினால் இணைத்துக் கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. 0024 5001 1846–டபிள்யு. ஏ. ஆர். எம். பெரேரா

2005.5.26 ஆந் திகதியன்று வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபையினால் நடாத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது :–

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் நீர்கொழும்பு, செல்பி வீதி, இல. 3/67 ஐச் சேர்ந்த வெலிவேரியகே அனிக்லெடஸ் ரெமிஜியஸ் மில்டன் பெரேரா என்பவர் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எப். பெனான்டோபுள்ளேயினால் 1999, மே 14 என திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஈட்டுப் பிணை இல. 2310 இன் மீது கட்டணங்களை செலுத்தத் தவறியுள்ளார். ஆகவே தற்பொழுது வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி லிமிட்டெட் இற்கு 2005, சனவரி 07 ஆந் திகதியன்று உள்ளவாறு பன்னிரண்டு இலட்சத்து ஆறாயிரத்து நாநூற்றி இருபத்தொரு ரூபா பத்து சதம் (ரூ. 12,06,421.10) நிலுவையாக செலுத்த வேண்டியுள்ளது. எனவே வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) இனால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் இங்கே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள மேற்படி ஈட்டுப்பிணை இல. 2310 இனால் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் வளவுகளை மேற்கூறப்பட்ட பன்னிரண்டு இலட்சத்து ஆறாயிரத்து நாநூற்றி இருபத்தொரு ரூபா பத்து சதம் (ரூ. 12,06,421.10) தொகையினை ஐந்து இலட்சத்து இருபதினாயிரம் ரூபா (ரூ. 5,20,000) தொகைக்கு 2005, சனவரி 8 ஆந் திகதி முதல் விற்பனை நாள் வரை வருடாந்தம் இருபத்திநான்கு வீத (24%) மேலதிக வட்டியுடனும் விளம்பரச் செலவு மற்றும் ஏனைய நிகழ்ந்த செலவுகளுடனும் கிடைக்கப்பெற்றவைகளைக் கழித்து (ஏதுமிருப்பின்) மீட்டுக்கொள்வதற்காக கண்டி அனுமதிபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படும்."

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகள் மற்றும் பதிவுப் பிரிவுக்குள் குட்டிதூவ இரண்டாம் டிவிஷனில் அமைந்துள்ள செல்பி வீதி மதிப்பீட்டு இல. 32 ஐக் கொண்ட குட்டிதூவவத்தவின் லொட் 1 ஏ முன்னர் அழைக்கப்பட்ட கும்புக்கஹ வத்த என்று கூறி அழைக்கப்படுகின்ற காணியின் லொட் ஏ இன் எல்லாம் அனுமதி பெற்ற நிலஅளவையாளர் ஏ. சீ. எஸ். குணரத்ன வினால் 1966, நவெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபட இல. 4960 இன் பிரகாரம் வடக்கால் : முன்னர் கடற்கரை மற்றும் இப்பொழுது மார்கஸ் பெனான்டோ மற்றும் மேரி பெனான்டோ ஆகியோரின் காணி ; கிழக்கால் : இக்காணியின் லொட் பீ ; தெற்கால் : செல்பி வீதி மற்றும் ; மேற்கால் : ஜே. வின்சன்ட் பெனான்டோவின் காணி என்றவாறு செல்பி வீதி, இல. 32 இல் உள்ள கட்டிடங்கள் மற்றும் சகலவற்றுடன் எட்டு தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 8.5) விஸ்தீரணத்துடன அமைந்திருப்பதோடு நீர்கொழும்பு காணிப்பதிவகததில் புத்தக ஏடு ஏ 261/65 இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்காணி தற்பொழுது அனுமதி பெற்ற நில அளவையாளர் டீ. பிரசாத் விமலசேனவினால 1998, நவெம்பர் 14 ஆந் திகதி தயாரிக்கப் பட்ட 3255 ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்தின் பிரகாரம் பின்வருமாறு அமைந்துள்ளது- வடக்கால் : அன்தனி பெனான்டோ வின் காணி மற்றும் ; கிழக்கால் : பாதை மற்றும செல்பி வீதி ; தெற்கால் : செல்பி வீதி மற்றும் செபஸ்தியன் பெரேராவின் காணி ; மேற்கால் : செபஸ்தியன் பெரேராவின் காணி, அன்தனி பெனான்டோ வின் காணி என்ற அமைவிடங்களுடன் ஏழு தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 7.75) விஸதீரணத்துடன அங்குள்ள கட்டிடங்கள் மற்றும் சகலவை மற்றும் இல. 32 செல்பி வீதி, வளவுடன் அமையப்பெற் றுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

4-105/3

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டுக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை-2006**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 07.04.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.03.2006 |
| | | புதன் | 12.04.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.03.2006 |
| | | வெள்ளி | 21.04.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.04.2006 |
| | | வெள்ளி | 28.04.2006 | .. | நண்பகல் 12 | புதன் | 12.04.2006 |
| **மே** | .. | வெள்ளி | 05.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.04.2006 |
| | | வியாழன் | 11.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.04.2006 |
| | | வெள்ளி | 19.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.05.2006 |
| | | வெள்ளி | 26.05.2006 | .. | நண்பகல் 12 | வியாழன் | 11.05.2006 |
| **யூன்** | .. | வெள்ளி | 02.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.05.2006 |
| | | வெள்ளி | 09.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.05.2006 |
| | | வெள்ளி | 16.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.06.2006 |
| | | வெள்ளி | 23.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.06.2006 |
| | | வெள்ளி | 30.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.06.2006 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006, சனவரி 01.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.